# சர்வவியாபி

MISSION PRESS 1840
PONDICHERRY

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

14-05-2023 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சோபகிருது வருடம் (சித்திரை 31) | வருட சந்தா ₹ 200 | தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 60 | இதழ் 20 | பக்கம்-12


e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ்


## கடின முயற்சி மற்றும் விவேகத்துடன் கூடிய கல்வியும், விளையாட்டும்



**மே 6 சனிக்கிழமை** வத்திக்கானில் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து வந்திருந்த டென்னிஸ், படேல் (Padel) என்னும் உள்புற மற்றும் வெளிப்புற மட்டைப்பந்து விளையாட்டின் 6ஆவது பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களைச் சந்தித்த போது, **"நல்ல விளையாட்டு என்பது தாக்குதல் மற்றும் தற்காத்தல் என்பவற்றின் சரியான இயக்கவியலில் இருந்து வருகிறது, கடினமுயற்சி மற்றும் விவேகத்தை நன்கு இணைத்து ஒரு கல்விப்பயணத்தில் விளையாட்டு நடைபெற வேண்டும்"** என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### விளையாட்டு

"விளையாட்டு என்பது கல்வி மற்றும் பயிற்சியில் கவனம் செலுத்துவது, விளையாட்டு பயிற்சியாளர்கள், ஒரு தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் சிறந்த கல்வியாளர்கள் ஆவர். விளையாட்டில் தற்காப்புக்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். தாக்குதலுக்கான குணங்கள் மற்றும் பாதுகாப்பிற்கான குணங்கள் ஆகிய இரண்டும் அங்கே பயன்படுத்தப்பட வேண்டும்.

### போட்டி மனப்பான்மையும், பொறாமை மனப்பான்மையும்

ஒரு நல்ல கல்வியாளர் கடினமுயற்சி மற்றும் விவேகத்தை எவ்வாறு சமநிலைப்படுத்துவது என்பதை நன்கு அறிந்தவர், மாணவன் இதுவரை இல்லாத ஒரு புதிய அனுபவத்தைப் பெற அனுமதிக்கும் போது அவன் வளர உதவும் வகையில், சுதந்திரமாகவும் அதே வேளையில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களால் கைவிடப்படாமல் காக்கப்பட வேண்டும். பொழுது போக்கிற்காக விளையாடப்படும் விளையாட்டின் வழியாகக் கிடைக்கும் மகிழ்ச்சியை ஒருபோதும் பறித்துவிட வேண்டாம். போட்டிமனப்பான்மை நல்லது என்றாலும், போட்டியில் பொறாமை மேலோங்கினால், இது பல்வேறு வகையான சுயநலத்தைத் தூண்டி, விளையாட்டுப் பயிற்சியை அழித்து, கல்விக்கு முற்றிலும் நேர்மாறானதாக மாறிவிடும்.

### நேர்மறை

கடினமுயற்சி, விவேகம், தாக்குதல் மற்றும் தற்காப்பு ஆகியவற்றை ஒன்றாக வைத்து முன்னேறுங்கள். பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள், குழந்தைகளைப் பாதுகாக்கவும், எதிர்பாராத நிகழ்வுகளைத் தவிர்க்கவும், எல்லா பிரச்சினைகளையும் தீர்க்கவும் முயற்சிக்கவேண்டும். உண்மையான விவேகம், நல்ல பாதுகாப்பைப் போல, எப்போதும் நேர்மறையானது. எதிர்மறையான அணுகுமுறையாகக் கருதப்படும் தற்காப்பு என்பது தாக்குதலின் மற்றொரு வழி.

சிறுவர் மற்றும் சிறுமிகளின் திறன்கள் தொடர்பாக சூழ்நிலைகளை நன்கு மதிப்பிடுவதற்கு கல்வியில் விவேகம் இன்றியமையாதது. கல்வியாளர்கள் அச்சிறார்களை தற்காப்புகளில் பயிற்றுவிக்க வேண்டும்" என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

ஆசிரியர் பேனா...

# நம் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி

**தேர்வு முடிவுகள்:** +2 தேர்வு முடிவு வெளியாகி விட்டது. நம் மறைமாநிலப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களாக பணிபுரியும் அருட்தந்தையரையும் ஆசிரிய பெருமக்களையும் பாராட்டுகிறோம். அனைத்து பள்ளிகளின் தேர்ச்சி விகிதமும் சிறப்பாக இருக்கிறது. மாணவர்களும் பெற்றோரும் சுறுசுறுப்பாகிவிட்டனர். இருவருக்குமே பதற்றம் ஏற்பட்டுவிட்டது. அடுத்து சிறந்த கல்லூரியிலே, விரும்பும் பாடப் பிரிவிலே இடம் பிடிக்க வேண்டும். எந்த பயிற்சி மையத்திலே சேரவேண்டும் என்றெல்லாம் பதற்றம். யாரைப் பிடித்தால் சேர்க்கை கிடைக்கும்? எவ்வளவு கொடுத்தால் சேர்க்கை நிச்சயமாகும் என்பது வாட்டி எடுக்கும் கவலை, ஓயாமல் படித்து 600 க்கு 570 க்கு மேல் மதிப்பெண் பெற்றிருந் தாலும் விரும்பிய கல்லூரியில், விரும்பிய பாடப் பிரிவில் இடம் கிடைக்குமா? என்ற கவலை மாணவரை யும் பெற்றோரையும் தொற்றிக் கொள்(ல்)கிறது.

**நந்தினி:** பயிற்சி மையங்களுக்குச் (Couching Centres) சென்றால்தான் தேர்வுகளிலே வெற்றி பெற முடியும் என்பது பொய்மையாகும். பயிற்சி வகுப்பிற்கு (Tution) செல்லாமலே தற்போது 600 க்கு 600 பெற்ற குழந்தை நந்தினி சாதனை படைக்கவில்லையா? ஏழைக் குடும்பத்தில் பிறந்த அந்த குழந்தை தன்னம்பிக்கையோடு உழைத்ததின் பலன்தானே இந்த தேர்ச்சி? “கல்வியே உனது சொத்து” என்ற தாயின் வார்த்தைகள் நந்தினிக்கு ஊக்கம் அளித்தது. குடும்பத்தின் பொருளாதார (ஏழ்மை) சூழல், மேலெழ வேண்டும் என்று நந்தினிக்கு உந்துசக்தியானது. பெற்றோர், ஆசிரியர்களிடம் இருந்து எவ்வித வற்புறுத்தலோ அழுத்தமோ இல்லை; சுயமுயற்சி, தன் நம்பிக்கை போன்றவையே நந்தினியின் வெற்றிக்கு காரணம். (Studying without being under any pressure helped greatly) எதிர்காலத்தில் மாணவர், மாணவியர் நந்தினியை தங்கள் முன்மாதிரியாகக் கொண்டு சாதனை படைக்க முயலட்டும்.

**அறிவியல் ஆபத்து:** அறிவிய-லும், தொழில் நுட்பத்திலும் உலகம் வேகமாக வளர்ந்து வருகிறது. மனித பண்பாட்டிற்கும் மேன்மைக்கும் இவை துணை நிற்கின்றனவா என்று ஊன்றி கவனித்தால், உண்மையில் இல்லை என்பது புரிந்துவிடும். பொழுது போக்கி பலரை சோம்பேறியாக்குவதற்கும், அதனையே முதலீடாக்கி அநீத வழியில் பொருள் (பணம், சொத்து) ஈட்டுவதற்கும் இவை துணை போகின்றன. “பண்பு வளர்ச்சிக்கு உதவ வேண்டிய அறிவியல் தொழில் நுட்பங்கள் அழிவுக்கு துணைபுரிகிறது” என்று சமூக அக்கறை கொண்டோர் புலம்புகின்றனர்.

செயற்கை அறிவுத்திறன் (artificial intelligence) கொண்ட மனித இயந்திரம் எதிர்காலத்தில் மனித குலத்திற்கே அச்சுறுத்தலாக இருக்கும். இன்று அதனைப் பயன்படுத்தி நாம் விரும்பியதை விரைவில் செய்துகொள்ள முடியும். ஆனால் காலப்போக்கில் மனிதர் சிந்திக்கும் திறனும் முடிவெடுக்கும் ஆற்றலும் அற்று வீழ்ந்து கிடப்பர்; தனி மனித சுதந்திரமும், மனித மாண்பும் இழந்த ஒரு ஜடப்பொருளாக மனிதர்கள் மாறிவிடுவர். இந்த ஆபத்து இருக்கிறது என்று தெரிந்தும் அறிவியல் தொழில்நுட்பத்தையே விரும்பும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர்.

**கல்வி வியாபாரம்:** இன்று கல்வி உட்பட எல்லாமே வியாபாரமாகிவிட்டது வேதனைக்குரியது. இலவச கல்வி கொடுக்க வேண்டியது அரசின் கடமை. தனியார் பள்ளிகள் கல்வியை வியாபாரமாக்கிவிட்டன; அவற்றை கட்டுப்படுத்த வேண்டும் என்று ஆட்சியாளர்களும், சமுதாய தலைவர்களும் சொல்வது நமக்கு கேட்கின்றது. தனியார் பள்ளி நடத்த அனுமதித்தது கூட பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் இன்று **பயிற்சி மையங்களுக்கு தரச் சான்று** என்ற நிலைக்கு கல்வி வியாபாரமாகி விட்டது. (கல்வி வணிகத்தை அங்கீகரிக்கும் திட்டமா? சு. தங்கராஜா, தினமணி 8 மே, 2023).

**இயல்பான வளர்ச்சி:** பாலர் பள்ளியிலே குழந்தை சேர்க்கப்படுவதற்கு முன்பாகவே ஒரு குழந்தை பயிற்று மையத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. இதனை அவலமாக கருதுவதற்கு பதில் பெருமையாக கருதும் நிலையை என் என்பது? குழந்தையின் இயல்பான மூளை வளர்ச்சி கற்றல் திறமை, தன்முயற்சி, தேடல் ஆர்வம் போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டியது பெற்றோரும், உடன்பிறப்புக்களும்; சுருங்கச் சொன்னால் குடும்பம் இவையே. காய்களையும், பழங்களையும் கல் வைத்து முதிர்ச்சியடையச் செய்வதுபோல காயை கனியாததை தடிவைத்து கனிய வைப்பதுபோல குழந்தைகளை வதைத்து அறிவு சேமிப்பு கிடங்குகளாக்குவது தனிப் பயிற்சி, திறன் பயிற்சி மையங்கள். மின்சாரம் கண்டுபிடித்தவரும், தொலைபேசி கண்டுபிடித்தவரும், விமானத்தை கண்டுபிடித்தவரும், கணினி கண்டுபிடித்தவரும், இன்னும் நம் நாட்டு மேதைகளும் எந்த பயிற்சி மையத்திற்குச் சென்றார்கள்? யோசிப்போம்.

**எட்டி கனி:** பாடம் சொல்-த் தருவதை விடுத்து, அரசு கேட்கும் தரவுகளை சேகரித்து உடனுக்குடன் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டியதே வேலையாகிவிட்டது. இது ஒரு தலைமை ஆசிரியரின் குமுறல். இந்த நிலையிலே இது எந்த விதத்தில் சரி? பாடம் கற்றுக் கொடுத்தோம்; ஆனால் வாழ்க்கையை படிக்க கற்றுத் தரவில்லையே. படிப்பைச் சொல்-த் தந்தோம்; பண்பை சொல்-த் தரவில்லை. பல்திறன்களை வளர்த்து விட்டோம்; திறனாய்வு செய்ய திடப்படுத்தவில்லை. தகவல்கள், தரவுகள் இடங்களாக மூளையை மாற்றி விட்டோம், அறம் விரும்பும் ஞானத்தை கொடுக்க வில்லை. எத்தனை பட்டங்கள் பெற்றும் எவ்வளவு செல்வம் சேர்த்தும் பிறர்க்கு பயனில்லாது போனால் ஊர் நடுவே பழுத்த எட்டி கனிபோல் வெறுக்கப்படும்.



21-5-2023

# விண்ணேற்ற பெருவிழா



அருள்திரு. A. தெய்வநாயகம்
பங்குதந்தை, ஆற்காடு.

திருச்சபை தம் மக்களோடு சேர்ந்து ஆண்டவரின் விண்ணேற்ற பெருவிழாவை கொண்டாடுகிறது. இப்பிருவிழா இயேசுவின் மாட்சிமையின் உச்சமாக கருதப்படுகிறது. தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற வந்த இயேசு அதை நிறைவு செய்து மீண்டும் விண்ணகத் தந்தையிடம் செல்கிறார். தனது பணி நிறைவுற்றாலும் தொடர்ந்து தன் சீடர்கள் வழியாக நற்செய்தி ஆற்ற அவர்களை பணிக்கிறார். ஆண்டவருடைய விண்ணேற்ற நிகழ்வு மூன்று இடங்களில் நமக்கு தரப்பட்டுள்ளன ( மாற் 16:19-20, லூக் 24:50-53, திப 1:4-14).

இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு தடுமாற்றத்தோடும் தயக்கத்தோடும் பயத்தோடும் இருந்த சீடர்களை பலமுறை ஆண்டவர் திடப்படுத்துகிறார். தனக்குப் பின் தமது சீடர்கள் தொடர்ந்து இப்பணியை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையை பெற்றபிறகு ஆண்டவர் இயேசு விண்ணேற்றம் அடைகிறார். இயேசு தம் உயிர்த்தெழுதல் குறித்து தெளிவான சான்றுகளை சீடர்களுக்கு அளித்தார். பல இடங்களில் இயேசுவின் உயிர்ப்புக்கு சீடர்கள் சான்று பகர்ந்து உள்ளனர் (லூக் 2:32, 3:15, 5:32, 10:41, 13:3...). இயேசுவின் விண்ணேற்ற பெருவிழாவில் திருமுழுக்கு குறித்து திருத்தூதர் பணிகள் நமக்கு விளக்குகிறது. நமது திருமுழுக்கில் தூய ஆவியை நாம் பெறுகிறோம். நம்மில் குடிகொண்டு செயலாற்றும் தூய ஆவியின் வழியாக மூன்று பயன்களை நாம் அடைகிறோம்.

1. நமது கிறிஸ்துவ அனுபவத்தின் தொடக்கம் தூய ஆவியால் அமைகிறது. தூய ஆவியால் நாம் கிறிஸ்துவுக்கு உரியவர் ஆகிறோம் (உரோ 8:9) அவரால் நாம் கிறிஸ்துவில் இணைகிறோம் (1கொரி 6:17) அவரால் நாம் கடவுளின் பிள்ளைகளாக மாறுகிறோம் (உரோ 8:14-17, கலா 4:6,7) அவரால் நாம் கிறிஸ்துவின் உடலாகிறோம் 1கொரி 12:13).
2. தூய ஆவியே நம் வாழ்வின் வல்லமை. நம்மில் அவர் பெரும் மாற்றம் செய்கிறார், நாம் கிறிஸ்துவாகவே மாறுகிறோம் (கலா 3:3, பிலி 1:6).
3. தூய ஆவி கிறிஸ்தவ சமூகத்தை கிறிஸ்துவில் இணைக்கிறார் (எபே 2:19-22). தூய ஆவியை எல்லாரும் பெறலாம். அவர் எல்லோரிலும் செயலாற்றுகிறார் ( 1 கொரி 12:11 எபே 4:4).

இயேசுவின் மாட்சியை சீடர்கள் தமது கண்முன்னே காண்கிறார்கள். வெண்ணுடை அணிந்து இருவரும் வானத்தூதர்கள். இயேசு உடலோடு சீடர்கள் காண விண்ணேறிச் சென்றது போல மீண்டும் வருவார் என அவர்கள் அறிவித்தனர். அவர் உலகிற்கு திரும்பவும், அதை ஆளவும் வருவார். அவருடைய வருகைக்கு நாம் தயாராக இருத்தல் வேண்டும் (1தெச 5:2). இது வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு வாழாமல் இருப்பது அல்ல மாறாக நிகழ்கால கடமைகளில் முனைப்பாய் இருந்து கிறிஸ்துவின் பிள்ளைகளாக நமது வாழ்வில் இயேசுவின் விண்ணேற்ற மகிழ்வை அனுபவிக்க அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

**உடனிருப்பு**

இயேசுவின் உடனிருப்பை நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திருப்பலி நிகழ்வின் வழியாகவும், இறை வார்த்தையின் வழியாகவும் உணர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த விண்ணேற்ற பெருவிழாவில் தனது உடன் இருப்பை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள இயேசு தமது சீடரை போதிக்க அனுப்புகிறார். இயேசுவின் நற்செய்தி பணி உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். உலக மக்கள் அனைவரும் நற்செய்தி பெற வேண்டும். பாலஸ்தீனா என்று ஒரு குறிப்பிட்ட இடத்திலும், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் நிகழ்ந்த மீட்பு பணி நில வரையறையும் கால வரையறையும் கடந்து எல்லா இடங்களுக்கும் செல்ல வேண்டும். இதற்காகத்தான் இயேசு சீடர்களை தேர்ந்தெடுத்தார், அவர்களுக்கு பயிற்சி அளித்தார். தனது பணியை முடித்துக் கொண்ட இயேசு, இனி சீடர்கள் வழியாக இப்பணி தொடர வேண்டும் என்று விரும்புகிறார். அதை ஒரு கட்டளையாகவே சீடருக்கு கொடுக்கிறார். சீடர்களின் நற்செய்தி பணிக்கு துணையாக இருக்க இரண்டு சிந்தனைகளையும் இயேசு தருகிறார்.

1. உயிர்த்தெழுந்த இயேசு வெற்றி வாகை சூடினார். ஓர் ஆழ்ந்த கொள்கைக்காக, அதாவது இறையரசு என்ற லட்சியத்திற்காக பல்வேறு பணிகளை மேற்கொண்டவர் அந்த இலட்சியத்தை தம் பாடுகள், இறப்பின் மூலம் நிறைவு செய்துவிட்டார். ஆகவே அவர் விண்ணகத்திலும் மண்ணகத்திலும் அனைத்து அதிகாரங்களையும் பெற்று விட்டார். இத்தகைய சிந்தனை நற்செய்தி பணியை தொடர்ந்து செயல்படுத்தவிருந்த சீடருக்கு ஒரு மாபெரும் புத்துணர்ச்சியும் பலமும் தரக்கூடியது.
2. தாம் உலக முடியும் வரை சீடரின் நற்செய்தி பணிக்கு உறுதுணையாக இருப்பதாகவும் அவர் வாக்களிக்கிறார். அதாவது நற்செய்தி பணியை தொடங்கியவர் இயேசு, இனி அதைத் தொடர்ந்து வழிநடத்துபவரும் அவரே என்கிற மகிழ்ச்சியான சிந்தனையுடன் இன்றைய நற்செய்தியை இயேசு நிறைவு செய்கிறார். இவ்வாறு தொடர்ந்து தான் சீடர்களோடும் நற்செய்தியை ஏற்பவருடனும் தனது பிரசன்னத்தை உறுதி செய்கிறார். விண்ணேற்ற பெருவிழாவில் இணைவோம்! மகிழ்வோம்! இறையருளை பெறுவோம்!



# எமனை எதிர்கொள்



*– சுவாமி ஆ. லூயிஸ்.*

இயேசு தனது திருப்பணியை ஆரம்பிப்பதற்கு முன் நாற்பது நாட்கள் தவமிருந்து வெளிப்படும் போது அலகை மூன்றுவித சோதனைகளான, உண்ண உணவு, உலகச் செல்வம், தான் என்ற தற்பெருமை போன்ற சோதனை களைக் கொடுக்கிறது. விழிப்புணர் வோடு அருள்வாக்கு துணையோடு இயேசு சோதனைகளை வென்றார் என்று திருநூல் நமக்குப் போதிக் கின்றது. சோதனைமேல் சோதனை போதுமடா சாமி, சோதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி என்பதையும் உணர்வோம். உலகம், பிசாசு, சரீரம் என்ற சோதனைகளை வென்று வாழ இயேசு அருள்புரிந்து வருகின்றார், விழிப்பாய் இருப்போம். இயேசு கற்பித்த செபத்தை மறவோம். எங்களை சோதனையில் விழவிடாதேயும், தீமையி-ருந்து எங்களைக் காப்பாற்றும் என்பதை மறவாது விழிப்புணர்வோடு பயணிப்போம்.

**மகாபாரதம்:** பாண்டவர்கள் காட்டில் வாழ்ந்தபோது ஒரு மானைப் பிடிப்பதற்கு மிகவும் முயற்சித்தனர். ஆனால் முடியவில்லை. சோர்ந்து போய் ஓர் ஆலமரத்தடியில் ஓய்வெடுத்தனர். தாகமாய் இருக்கிறது, மரத்தில் ஏறி எங்காவது ஒரு குளம் அல்லது ஓடைத் தெரிகிறன்றதா என்று கவனித்தான். அப்படியே குளத்தில் நீர் அருந்தி, நீர் எடுக்க முயன்றான். குளம் எனக்குரியது நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல் என்றது. இதற்கிடையில் மயங்கி ஓடை அருகே வீழ்ந்தான். இன்னொருவர் ஓடை நோக்கி சென்றபோது, அதே தடை முன்வந்தது.

சூரியன் சுடர் விடுவது எப்படி? “கடவுள் வல்லமையால்” என்று பதில் கிடைத்தது. எதைப் படிப்பதால் மனிதன் ஞானி ஆகின்றான்? பூமியைவிட எது நம்மைத் தாங்குகிறது? “தாய்தான்” என்று பதில் கிடைத்தது. இறப்பின் தெய்வம் எமன் இந்தச் சோதனையை வழங்கியது.

**நற்செய்தி:** உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம். அலகை சோதனைகள் அனைத்தை யும் முடித்த பின்பு, ஏற்றகாலம் வரும்வரை அவரை விட்டு அகன்றது. எமன் என்பவன் ஒவ்வொருக்குள்ளும் சுயநலம் என்ற போர்வையில், கடவுளின் சாயலை மறைத்து, இவ்வுலகப் போக்கின்படி நயவஞ்சகமாக வலைவிரித்தாடு கிறது. தனக்குள் இருக்கும் இறை ஆவிக்குச் செவிமடுத்தால் யாருக்கும் கவலை இல்லை. விழிப்பாய் இருப்போம். நம்மை வென்று அயலானையும் வெல்ல வைக்கத் துணையாக இருப்போம். கடவுள் ஒருவர்தான் நிறைவான முழுமையான மெய்மை, இதை உணர்வதே நமது ஒரேப் பணி. கடவுள் அனைத்திலும் அனைத்தை யும் கடந்து பிரசன்னமாய் இருக்கிறார் கடந்தும் இருக்கிறார், உள்ளும் இருக்கிறார். எனவேதான் கட+உள் என்ற பொருள் பொதிந்த தமிழ் சொல்லை நாம் பயன்படுத்தி முக்தியை அடைகிறோம்.

**அன்றாட அனுபவம்:** நாம் உறங்கினாலும் உறங்கி விடுவோம், ஆனால் எமன் முப்பொழுதும் எப்பொழுதும் உறங்காமல் மனித குலத்தை, குறிப்பாக வழிகாட்டிகளை வலையில் சிக்கவைக்க முயன்று கொண்டு இருக்கிறது. உலகம் கவர்ச்சி மிகுந்தது. கடவுள் ஆற்றல் மிகுந்தவர். நாம் கடவுளின் பிள்ளைகள் கொஞ்ச காலம் உடலோடு உலகில் வாழ்கின்றோம். கடவுள் அருளும் சுதந்திரத்தையும் அவரது மகன் உயிர்த்த ஆண்டவரையும் பயன்படுத்தி இயேசுவைப் போல, மாதாவைப் போல வாழ்வது கடவுள் நமக்கு அருளும் அருள் வழியாகும்.

**இந்தியக் கிறிஸ்தவர்:** பாரத நாட்டின் பழம்பெரும் கிறிஸ்தவர் களும், புதிய கிறிஸ்தவர்களும் இந்நாட்டில் வாழ்ந்து வருகிறோம். நாம் சோதனைகள் மத்தியில் சாதனைப் புரிந்து வருவது பாராட்டுக்குரியது. எல்லார்க்கும் சோதனைகள் உண்டு. அவைகளை மேற்கொள்ள பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. தானாக, தனது பெற்றோர்கள் பெரியோர்கள், வழிகாட்டிகள் வழியாக சோதனைகளை வென்று சாதனைப் புரிவோம், சந்தோஷமாக இருப்போம், அயலானையும் மகிழ்ச்சியின் பாதைக்கு அழைத்து வருவோம். இறைவா உமது பெயர் போற்றப்படுவதாக. உமது அரசு வருக! உமது திருவுளத்திட்டம் அனைவரிலும் நிறைவாக நிறைவேறுக. செபமே நமது வெற்றிக்கு வழிவகுக்கும் பாதையாகும். செபி, உழை, ஓய்வு என வாழ்வோம்.

## விண்ணக வாழ்வின் 7-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:12-06-1943



மறைவு: 21-05-2016

**தே. ஜோதி**

ஆண்டவரே உம்மை நாடி வருவோரை நீர் கைவிடுவதில்லை – திபா 9:10

இரக்கம் நிறைந்த யேசுவே! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, தன் வாழ்வின் கடமை களை முடித்து இப்பூவுலகைவிட்டு உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட எங்கள் அன்புத் தந்தையும், எங்கள் குடும்பத் தலைவருமான இவருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம். இவரது ஆத்துமத்திற்கு நித்திய ஒளியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் தந்தருளும் சுவாமி – ஆமென். ஒரு கர்.மங்.திரி1

பிரிவால் துயருறும்

**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

கடம்பூர் (மையனூர் பங்கு)

220

# நிம்மதி தரும் அமைதி



– திரு B. மேரி ராபர்ட் சாந்திதாஸ்,
புதுவை–1.

**தென்றலும் சூறாவளியும்:** இனிய தென்றல் மலர்களின் வாசத்தை சுமந்துவந்து பூங்காற்றாக வீசும்போது அதன் இனிமையே அலாதியானது. மென்மையாக உடலை வருடும் இதமான, இயற்கை மணங்களை சுமந்துவரும் தென்றலை விரும்பாதவர் எவருமில்லை.

அதே காற்று, புயலாக, சுழன்றடிக்கும் சூறாவளியாக, சுழன்று வீசி செடி, கொடி, மரங்களை முறித்து போடும் பேய் காற்றாக வீசும்போது அதை யாரும் விரும்புவதில்லை. ஏனெனில் அதில் மென்மையில்லை, இனிமை இல்லை, ரசிப்பதற்கு ஏதுமில்லை.

**இறை அமைதி:** அமைதி கொண்ட மனம் அற்புதமானது. அமைதியின் ஆண்டவர் குடிகொள்ளும் கோயில், இனிய தென்றல் போன்றது. ஆழ்ந்த அமைதியில் ஆண்டவனே காண முடியும். உள்ள அமைதி கொண்டவர்களை காணும்போது நம்முள் ஒரு பரவசம் ஏற்படும். அவர்களை சுற்றி கண்ணுக்கு புலப்படாத வட்ட வளைய ஆரம் அமைந்து காண்பவர்களைப் பரவசப்படுத்தும். மனிதப் பிறவிகளான புத்தர், அருட்பெருஞ்ஜோதி இராம–ங்க அடிகள் போன்றவர்களை சித்தரிக்கும்போது அவர்கள் தலையை சுற்றி ஆரம் வரைவார்கள். அது அவர்கள் பெற்ற ஞானத்தையும், அடைந்த தெய்வீகத்தையும் குறிப்பதாக உள்ளது.

**சொல்லும் கொல்லும்:** பொறாமையும், பேராசையும், பொறுமையின்மையும், பெருங்கோபமும் ஒன்று சேர்ந்தால் உதிரும் சுடுசொற்கள் தீயைவிட பெரும் தீமை பயத்துவிடும். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு. அவசரப் புத்தியினால் அநேகருடைய உள்ளங்கள் நொறுக்கப்பட்டு, அநேக குடும்பங்கள் சின்னாபின்னமாகி யிருக்கின்றன.

**மாற்று மருந்து:** ஆத்திர மூட்டும் கடும் சொற்களுக்கும், அநாவசிய, அநாகரீக, அராஜக, அரக்கப் போக்கிற்கு சரியான மாற்று மருந்து பொறுமை, அமைதி, நிதானம், சகிப்புத்தன்மை. நம்மை அநாவசிய மாக யார் சீண்டினாலும், அவர்களை பழித்தீர்க்க சரியான மாற்றுவழி அவர்களை முற்றிலும் அலட்சியப் படுத்துதலே, ''பல்லுக்கு பல், கண்ணுக்கு கண்'' என்று எதிர்வாதம் செய்வதோ, அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவதோ, கேள்வி கேட்பதோ, விளக்கம் கொடுப்பதோ எதுவும் தேவையில்லை. ஏனெனில் இவற்றை யெல்லாம்விட அமைதி அதிகம் பேசும். அமைதி காப்பவருக்கே முத–ல் அமைதி கிடைக்கிறது. அமைதியின் மூலம் சூழ்நிலையைக் கட்டுப்படுத்த முடிகிறது. அமைதி காப்பவர் என்ன நினைக்கிறார், என்ன உணர்கிறார் என்பதெல்லாம் எதிராளிக்கு புரியாத புதிர்! அதனாலேயே பேசும் பேச்சை வெள்ளிக்கு ஒப்பிட்டால், காக்கும் அமைதியை தங்கத்திற்கு ஒப்பிடு வார்கள். ஏனெனில் அமைதி ஆழமானது, அளப்பதற்கரியது, அர்த்தம் நிறைந்தது. அமைதி தருவது பெரும் நிம்மதி.

## இறைவனில் இணைந்த 20-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 28-02-1945



மறைவு: 17-05-2003

**ஜோசப் அனந்து M.A.**

Dy.Director, Dept.of Statistics, S/o. Dr. A. ANANDOU

ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக! இவரது ஆன்மா சாந்தியடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

17-5-2023 அன்று காலை 6.30 மணிக்கு புதுவை, ரெயின்போ நகர், புனித ஜான்மரி வியான்னி ஆலயத்திலும், காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலயத்திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகன்கள், மருமகள்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
சகோதரி மற்றும் அனந்து
குடும்பத்தினர்கள்.

## விண்ணக வாழ்வின் 18-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 8.11.1974



மறைவு: 23.5.2005

**Mrs. ஆனி சித்ரா அனந்து B.A.B.L**

(Daughter in law of late Joseph Anandou)

"என்னை அறிந்து நேசித்தவர்களே, மரணத்தில் என்னை மறவாதீர்கள்"

ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப் பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக! இவரது ஆன்மா சாந்தியடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

23-5-2023 காலை 6.30 மணிக்கு புதுவை, ரெயின்போ நகர் புனித ஜான்மரி வியான்னி ஆலயத்தில் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும் கணவர்
அனந்து ஜேம்ஸ்ராஜ்
மகள்கள், சகோதரர், சகோதரி
அனந்து குடும்பத்தினர்.

## திருத்தந்தையின் டுவிட்டர்

குடும்பத்தில் தினமும் புனிதமான ஜெபமாலையை செபிப்பதன் மூலம், அந்த குடும்பத்தில் நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியின் எண்ணெய் ஒருபோதும் தீர்ந்துவிடாமல், கடவுளுடன் இணைந் திருக்கும் அதன் உறுப்பினர்களின் வாழ்க்கையிலிருந்து இவை வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. - 06.05.2023

நிகழ்காலத்தால் நம்மை மூழ்கடித்துக் கொள்ள வேண்டாம்: விண்ணகத்தை நோக்கிப் பார்ப்போம், இலக்கை நினைவில் கொள்வோம், நாம் நித்தியத்திற்கு, கடவுளுடனான சந்திப்பிற்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைப்போம். இயேசுவை நேசிப்பதற்கும், அவரைப் பின்பற்று வதற்குமான தெரிவை இன்று புதுப்பிப்போம் - 07.05.2023

# உயிர்ப்பின் உண்மைகள்



திரு *A.* **யூஜின்,** காரைக்கால்.

சென்ற இதழ் தொடர்ச்சி



1) இயேசுவை சோதிக்கும் நோக்குடன் அடையாளம் கேட்ட பரிசேயர் சதுசேயர் இவர்களிடம் இப்படி கூறுகிறார். உங்களுக்கு யோனாவின் அடையாளம் தவிர வேறு எந்த அடையாளமும் கொடுக்கப்படமாட்டாது (மத்.16:4).

2) இயேசுவின் உருமாற்ற நிகழ்வின்போது தன் மூன்று சீடர் களிடம் இவ்வாறு கூறுகிறார். மானிட மகன் இறந்து உயிருடன் எழுப்பப் படும்வரை இக்காட்சி பற்றி எவரிடமும் சொல்லக்கூடாது என்று கட்டளையிடுகிறார் (மத் 17:8).

3) க-லேயாவில் சீடர்கள் ஒன்று திரண்டிருக்கும்போது, இயேசு அவர்களிடம், மானிட மகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார் என்று விரிவாக விளக்குகிறார் (மத்.17:22).

4) இயேசு தனது சாவை மூன்றாம் முறை முன்னறிவிக்கும் போதும் இப்படிக் கூறுகிறார். மானிட மகன் தலைமை குருக்களிடமும், மறைநூல் அறிஞர் களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதிப்பார்கள். அவர்கள் அவரை ஏளனம் செய்து, சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார் (மத் 20:18).

5) ஆண்டவர் இயேசு கோவிலைத் தூய்மைபடுத்தும் நிகழ்வின்போது அடையாளம் கேட்ட யூதர்களிடம், இக்கோவிலை இடித்துவிடுங்கள் நான் மூன்று நாளில் இதைக் கட்டி எழுப்புவேன் என்றார் (யோவான் 2:19).

அன்றைய சூழ-ல் இந்த அறிவிப்புகள் யூதர்களுக்கோ, இயேசுவின் சீடர்களுக்கோ புரியவில்லை. என்றாலும் இன்று நம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

➡ தொடரும்...

---

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

## இரக்கத்தின் ஆண்டவருக்கு நன்றி



✠ என் வலது கண்ணில் பார்வை குறைபாடு. கண்களில் புரை என்று இரு கண்களிலும் அறுவை சிகிச்சை செய்தனர். பின் கண் நரம்புகளில் வீக்கம் என்று வலது கண்ணில் மூன்று முறையும், இடது கண்ணில் இருமுறையும் ஊசிபோடப்பட்டது. மறு ஆய்வுக்காக மற்றொரு மருத்துவ மனைக்கு அனுப்பினார்கள் எனக்கு மாலையானதும் கண் தெரியாது என்று சொல்-விட்டார்கள். இரக்கத்தின் ஆண்டவரிடம் நம்பிக்கையோடு மன்றாடினேன். இதுவரை அந்த குறைபாடு இல்லை. இரக்கத்தின் ஆண்டவர் அற்புத சுகம் தந்துள்ளார். "**இயேசுவே உம்மில் என் முழு நம்பிக்கை வைக்கிறேன்.**"

✠ என் மகனுக்கு திருமணமாகி 10 வருடமாகியும் குழந்தை பாக்கியமில்லை. மருமகளுக்கு 2 முறை கருச்சிதைவு ஏற்பட்டது. மறுபடியும் கருவுற்று 60 நாட்களான போது குழந்தைக்கு இதய துடிப்பு மிகவும் குறைந்துவிட்டது, 10 நாட்கள் கழித்து வாருங்கள் என்று டாக்டர் சொல்-விட்டார். மிகுந்த நம்பிக்கையோடு இரக்கத்தின் ஆண்டவரிடம் உமது விலைமதிக்க முடியாத ஒரு துளி இரத்தத்தை அக்குழந்தைக்கு கொடுங்கள். உங்கள் உயிர் மூச்சு காற்றை அக்குழந்தைக்கு கொடுங்கள் என்று உருக்கமாக வேண்டிக் கொண்டோம். 10 நாட்கள் கழித்து மருத்துவரிடம் சென்றபோது அவர் "இது நிச்சயம் கடவுளின் செயல்" என்றார். ஆண்டவரின் அளவு கடந்த இரக்கத்தால் ஆரோக்கியமான ஆண் குழந்தை பிறந்துள்ளது. "**இரக்கத்தின் ஆண்டவரே உமக்கு கோடான கோடி நன்றி.**"

- **ரெஜினா கையார்,** புதுச்சேரி.

---

## மனம் மலர



- அருட்தந்தை. P.மரியதாஸ்
தர்மபுரி மறைமாவட்டம்.



சில காயங்கள்
மருந்தால் சரியாகும்

சில காயங்கள்
மறந்தால் சரியாகும்

ஆடம்பரமாக வாழ
கார் தேவை



ஆரோக்கியமாக
வாழ மிதிவண்டி
தேவை



கருப்பு மனிதனின் இரத்தமும்
சிவப்புதான்
சிவப்பு மனிதனின்
நிழலும் கருப்புதான்
வண்ணங்களில்
இல்லை - நம்
எண்ணங்களில்
உள்ளது வாழ்க்கை



## 36 ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...

### அருட்பணி பியர் கையே MEP

தமிழாக்கம் **Dr.Sr.M.லில்லி மரி** ME, புதுச்சேரி.

என் அயலான் என்ன நினைக்கிறான் என்று அறிய நான் அவனுடைய ஆன்மாவை வாசிக்கத் தேவையில்லை. அதை அறிய அவன் எந்தப் பாதையில் நடக்கிறான், எப்படி செயல்படுகிறான் என்று கவனித்தால் போதும்.

அவனுடைய செயல்கள் அன்பற்றதும் பண்பற்றதுமாக இருந்தால் அவனுடைய மனம் அன்பில்லாததும் பண்பில்லாததுமான எண்ணங்களால் ஆளப்படுகிறது என்று நான் அறிவேன். அவன் தொடர்ந்து தன்னையே புகழ்ந்துகொண்டிருந்தால், தன்னையே எதிலும் முன்னிலைப்படுத்திக் கொண்டிருந்தால் அது அவன் தன்னையே மிக உயர்வாக மதிப்பிடுகிறான் என்பது விளங்கும். அவன் தன்னல மறுப்புள்ளவனாக நடந்துகொண்டால் அவன் சுய தியாகங்களை விரும்புகிறான் என்றும் அது தேவை என்று காண்கிறான் என்றும் நான் அறிவேன்.

ஒருவன் சுலபமாகவும் முழு விருப்பத்தோடும் அடிக்கடியும் பாவம் கட்டிக்கொள்கிறான் என்றால் அவன் பாவத்துக்கு அஞ்சவில்லை என்பதைக் காட்டுகிறது, துணிவில் அவனுக்கு அக்கறையில்லை.

வலிமையும், எதிர்த்து நிற்க முடியாததும் ஆசாபாசத்துக்குப் பொருந்துவதுமானதும் வரும்போது சிந்திக்க நேரம் எடுக்கும்முன் மனிதன் அதைத் தன் நினைவில் வாழ்கிறான். பின்னர் அவற்றைச் செயலில் நிறைவேற்றுகிறான்.

எனவேதான் மேலே கூறியவை பற்றி சரியான கருத்துகள், தெளிவான கருத்துகள், குறிப்பாக நல்லொழுக்கம் பற்றியும் ஆன்மிக வாழ்வு பற்றியும் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

கடவுள் எப்படிப் படைத்தாரோ அப்படியே நமது பகுத்தறிவு இருக்கட்டும். அவர் விரும்பியபடி அது உண்மையின் கருவியாகவும், உண்மையான நீதிபதியாகவும், முன் தீர்மானம் இன்றியும், விருப்பு வெறுப்பு இன்றியும் உண்மையைக் கண்டறிவதைவிட வேறு காரணங்கள் இன்றியும், எல்லாவற்றையும் நற்செய்தியின் ஒளியில் பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் திருப்பிரசன்னம் என்னும் தராசு தட்டில் வைத்துக் கணிக்க வேண்டும். ஒளியின் தூதுவரின் வழிநடத்தலில் ஆன்மா பாதுகாப்பாக இருக்கும். அந்தத் தூதுவரின் கணிப்பு கடவுளின் கணிப்பாகவே இருக்கும். அதனுடைய முடிவு கடவுளின் முடிவுகளின் எதிரொலியாகத்தான் இருக்கும்.

நல்ல எண்ணம் பின்வருமாறு அறியப்படும். அதனுடைய அழகு, நேசிக்கத்தக்கத் தன்மை, விரும்பப்படும், பாராட்டவும்படும். தீமை பின்வருமாறு வெளிப்படும். வெறுக்கத்தக்கதும் ஆபத்தானதும் புறக்கணிக்கப்படக் கூடியதாகவும் வெளிப்படும்.

சோதனைகள் வரலாம். அவை எல்லாவற்றையும் முறியடிக்க முயற்சி செய்யுங்கள். அவை நம் புலன்களைக் கவரலாம். ஆசாபாசங்களை அதிகம் தூண்டலாம். அவை எல்லா மனிதருடைய இதயங்களிலும் உறக்க நிலையில் இருக்கலாம். ஆன்மா அவற்றின் ஆபத்தை உணர்ந்து கொண்டால் எச்சரிக்கையாக இருக்கும். இறையருளின் உதவியுடன் தன் எதிரியைத் தோற்கடிக்கும். ஆபத்து வேளையில் அந்த உதவி ஒருபோதும் தோற்பதில்லை.



Fr.Gayet

ஆனால் எவருடைய பகுத்தறிவு ஒழுங்கின்றி, இருளால் சூழப்பட்டு, குருடாக, தெளிவின்றி இருக்கிறதோ அவருக்கு ஐயோ கேடு! எவருடைய பகுத்தறிவு கைவிடப்பட்ட நிலையில், தன் புலன்களால் மட்டும் பார்த்து தன் தீய நாட்டங்களை மட்டும் கேட்டு வாழ்கிறதோ அவருக்கு ஐயோ கேடு! எவருடைய கருத்துகளும் பார்வைகளும் தவறானவையோ, எவருடைய தீர்மானங்கள் கடவுளுடைய தீர்மானங்களுக்கு எதிராக இருக்கின்றனவோ அவருக்கு ஐயோ கேடு!

ஒருவன் புண்ணியத்தின் அழகையும், அதன் அவசியத்தையும் பார்க்காவிட்டால் எவ்வாறு அவன் புண்ணியத்தை நேசித்து அதைப் பயிற்சி செய்வது? பாவத்தின் அவலட்சணத்தையும், ஆபத்தையும் ஒருவன் பார்க்காவிட்டால் எவ்வாறு தீமையையும் பாவத்தையும் விலக்குவது? அவனுடைய ஆன்மா வலுவிழந்த கப்பலைப்போல புயல் சூழ்ந்த கடலில் மிதக்கும். ஒளி எல்லாம் மறைந்த நிலையில் நமது இருளில் அந்தக் கப்பல் பயணம் செய்யும். சுக்கான் இல்லாத கப்பலோட்டியின் வழி நடத்தலில் அந்தக் கப்பல் பயணம் செய்யும்.

மகிழ்ச்சியற்ற நிலையில் நமது மனச்சான்று மற்ற மதிப்பு மிக்க கருவிகளான அருமையான ஒழுங்கு முறை சுலபமாகச் சீர் குலைந்து போகிறது. ஆன்மாவின் பெரிய எதிரி அற்பப்பாவம், அது நேசிக்கப்படுகிறது, முழு விருப்பத்தோடு வரவேற்கப்படுகிறது. இவ்வாறுதான் தவறு நிகழ்கிறது.

மனிதன் முரண்பாடுகளால் நிறைந்த ஒரு விசித்திர பிறவி, அவனுடைய சுயமதிப்பும் விசித்திரமானது. அவனுடைய தற்பெருமைக்கு எல்லை இல்லை. அவனுக்கு எதுவும் உயர்ந்தது இல்லை. மிக அழகானதும் இல்லை. மகிமையும் புகழும் அவனைக் கவர்கின்றன. பிறரால் அதிசயிக்கப்பட விரும்புகிறான். தேடப்படவும் கைதட்டப்படவும் தேடுகிறான். மனிதனுடைய மடமையில் அவன் தொடர்ந்து லூசி∴பேர் நம் முதல் பெற்றோருக்கு அளித்த வாக்குறுதியை உண்மையென நம்புகிறான்: நீங்கள் கடவுளைப் போல இருப்பீர்கள்.

ஒவ்வொருவரும் தங்களைக் காட்சிப் பொருளாக்க ஓர் இடத்தைத் தேடுவதுபோலத் தோன்றுகிறது. இந்த மண்ணுலகில் நாம் ஒவ்வொருவரும் நமக்கென ஒரு சிறு உலகைப் படைத்து அதில் சிறு கடவுள் போல நடந்துகொள்ளவும், நம்மைச் சுற்றி அரசவைப் பணியாளர்களும் ஆராதிக்கும் வானதூதர்களும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். சூரியனைச் சுற்றி வலம் வரும் கோள்களைப் போல இவையெல்லாம் நம்மைச் சுற்றி வலம் வந்து கடந்து போகும்போது நம்மை வணங்க வேண்டும், ஆராதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

நம் உடன் வாழ்பவர்களால் நாம் ஏற்றுக்கொள்ளப்படவும் கைதட்டப்படவும் விரும்புகிறோம். அதுவும் அவை அடிக்கடி நிகழ வேண்டும் என்று விரும்புகிறோம். இது நமது முக்கிய ஆவல் இல்லையா?

➡ தொடரும்



## கரப்பான் பூச்சி

- திரு. அல்போன்ஸ் மோசஸ்
புதுச்சேரி-9.



மதிய நேரம் உணவு உட்கொள்ள ஒரு ஓட்டலில் சென்று அமர்ந்தேன். எனக்கு பக்கத்தில் மூன்று பெண்கள் அமர்ந்து தங்களுக்குத் தேவையான உணவுக்கு ஆர்டர் செய்து விட்டு ஜாலியாக பேசிக் கொண்டிருந்தனர்.

எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு கரப்பான் பூச்சி ஒரு பெண்ணின் தோள் மீது அமர்ந்தது. உடனே அந்தப் பெண்மணி பயந்து அதிர்ச்சியில் கூச்சலிட்டாள். கைகள் நடுங்க அந்த பூச்சியைத் தட்டிவிட முயற்சி செய்தாள். ஆனால் அது அமைதியாக இங்கும் அங்கும் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தது. அவளது ஆட்டம் தாங்க முடியாமல் பறக்க ஆரம்பித்தது

சிறிது நேரத்தில் மீண்டும் அந்த இடத்திற்கு வந்து வேறொரு பெண்ணின் மீது அமர்ந்தது. அந்தப் பெண்ணும் வெலவெலத்துப்போய் நடுநடுங்கி கூச்சல் போட்டுக் கொண்டே அதை ஓட்ட ஆரம்பித்தாள். அவளது முயற்சி வெற்றி பெற்றது. கரப்பான் புச்சியும் பறந்தது.

அந்தப் பெண்களின் கண்கள் அனைத்தும் அந்த கரப்பான் பூச்சியின் மேலேயே இருந்தன. ஆந்த பூச்சி சற்றுத் தொலைவில் சென்றதும் அப்பாடா என்று பெருமூச்சி விட்டனர். ஆனால் அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை.

மீண்டும் அங்கு பறந்த வந்த அந்தப் பூச்சி இந்த முறை பெண்களை ஓரம் கட்டி விட்டு ஒரு சிறுவனின் தோள் மீது அமர்ந்தது. அவனும் பொறுமையுடன் அதைப் பார்த்துக் கொண்டே கப்பென்று பிடித்தான். அது அவன் கையில் மாட்டிக் கொண்டது. அப்படியே எடுத்துச் சென்று வெளியிலே போட்டு விட்டு வந்தான்.

இவனால் முடிந்தது அந்தப் பெண்களால் ஏன் முடியாமல் போயிற்று என்று சிந்திக்கத் தொடங்கினேன். அது வேறொன்றுமில்லை அந்தச் சூழ்நிலையை அவன் கையாண்ட விதம் தான் அது.

பொதுவாகவே பெண்கள் பயந்த சுவாபம் கொண்டவர்கள். அந்த பயந்த சுவாபம்தான் அவர்களை பதற்றமடையச் செய்தது. அதே நேரத்தில் சிறுவர்கள் எதற்கும் துணிந்தவர்கள். அதனால் அதன் வழியிலேயே அமைதியாகச் சென்று அதைப் பிடிக்க நேரிட்டது.

இதில் பார்க்க வேண்டியது என்னவென்றால் கரப்பான் பூச்சி தன் நிலையிலிருந்து மாறவில்லை. இவர் இல்லையென்றால் அவர் என்று மாறி மாறி உட்கார ஆரம்பித்தது. ஆனால் அந்தப் பெண்களின் பதட்ட நிலையும் பயந்த சுவாபமும்தான் அதற்குக் காரணம் என்பதும் அந்தச் சிறுவன் எந்தவித பதட்டமும் இன்றி எந்தவித உடனடி முடிவும் எடுக்காமல் அமைதியாக அந்தச் சூழ்நிலையைக் கையாண்ட விதமும்தான் என்பது எனக்குப் புரிய ஆரம்பித்தது.

**திடுதிப்பென்றும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்றும் முடிவெடுக்காமல் நிதானமாக சிந்தித்து செயல் படுவதுதான் வெற்றிகரமாக வாழ்க்கைக்கு சிறந்தது என்பதை உணர்ந்து சிறப்பாக வாழ்வோம்.●**

## நான்காவது ஞானியின் கதை

திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

20 -தொடர்ச்சி



அர்தபன் நடுங்கினார்.

பாபிலோனில் பேரீச்சந்தோப்பிலும், பெத்லகேமில் குடிசையிலும் ஏற்பட்ட அதே மனக்குழப்பம் “நம்பிக்கைக்கும் ஆழ்ந்த அன்புக்கும் இடையிலான போராட்டம். மதத்தின் கோட்பாடுகளுக்கிணங்க அவர் கொடுத்த இரண்டு பரிசுகளும் மனிதகுலத்தின் நன்மைக்காக கொடுக்கப்பட்டது. இப்பொழுது மூன்றாவதும் இறுதியானதும் கடந்து போக முடியாததுமான கடைசி சோதனை முளைத்திருக்கிறது.

இது அவருக்குக் கிடைத்த சிறந்த வாய்ப்பா அல்லது இறுதி சபலமா? அவரிடம் பதில் இல்லை.

குழம்பியிருந்த மனதில் ‘இது தவிர்க்க முடியாதது’ என்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது. தவிர்க்க முடியாதது கடவுளிடமிருந்தல்லவா வந்திருக்கிறது!

அவருடைய பிளவுபட்ட இதயத்திற்கு ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிந்தது - இந்த ஆதரவற்ற பெண்ணைக் காப்பாற்றுவது மெய்யான அன்பின் வெளிப்பாடாகும். அன்பு ஆன்மாவின் ஒளியல்லவா?

மேலாடையில் மறைவாக வைத்திருந்த முத்தை எடுத்தார். அது இவ்வளவு ஒளிமிக்கதாகவும், பளபளப்பாகவும், இளமைத் துடிப்புடன் கூடிய சோபை நிறைந்ததாகவும் தோன்றியதேயில்லை. அதை அடிமைப் பெண்ணின் கையில் கொடுத்தார்.

‘‘மகளே, இதோ உன் விடுதலைக்கான விலை! அரசருக்காக சேமித்து வைத்திருந்த எனது பொக்கிஷங்களில் எஞ்சியுள்ளது இது தான்.’’

அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, வானத்தில் இருள் அடர்ந்தது. வலிமிகு துயரத்துடன் போராடுபவரின் விம்மித் தணியும் மார்பைப் போல பூமி அதிர்ந்து குலுங்கியது.

வீடுகளின் சுவர்கள் தள்ளாட்டம் போட்டன. கற்கள் பெயர்ந்து வீதியில் விழுந்தன. தூசி மேகங்கள் காற்றை நிரப்பின. பீதியில் அலறியடித்து ஓடிய வீரர்கள் குடிகாரர்களைப் போல தள்ளாடி விழுந்தார்கள். செய்வதறியாது திகைத்த அர்தபனும் அவரால் மீட்கப்பட்ட பெண்ணும் ஆளுநர் மாளிகையின் சுவருக்கு அடியில் அமர்ந்து கொண்டார்கள்.

அவர் எதற்காக பயப்படவேண்டும்? எதற்காக வாழ வேண்டும்? கையிலிருந்த கடைசி காணிக்கையையும் அரசருக்காக கொடுத்துவிட்டார். அரசரைக் கண்டுபிடிக்கலாம் என்றிருந்த கடைசி நம்பிக்கையையும் இழந்துவிட்டார். தேடல் முடிந்தது. தோல்வியை ஏற்றுக்கொண்ட நிலையிலும் மனதில் அமைதி நிலவியது. தேடலைக் கைவிட்டதாலோ தாழ்ந்து பணிந்துவிட்டதாலோ ஏற்பட்டதல்ல இந்த அமைதி. அந்தத் தேடல் மிகவும் ஆழமான கூர்மையான ஆய்வுக்குட்பட்ட ஒன்று.

ஒவ்வொரு நாளும் தன்னால் முடிந்ததைச் செய்ததால், எல்லாம் நன்றாகவே நடந்தது என்று அவருக்குப் புரிந்தது. அவருக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்திற்கு உண்மையாக நடந்துகொண்டார். அதிகம் எதிர்பார்த்தார். கண்டுபிடிக்க இயலவில்லை என்றாலும், முடிவில் தோல்வியைச் சந்தித்திருந்தாலும் இது தான் சாத்தியமானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

– தொடரும்...

## புனித பேதுரு விவி–ய குறுக்கெழுத்து போட்டி – 237

**மே மாத வெளியீடு**

அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ் - தாராபுரம்



அன்பு உள்ளங்களே...



ஒவ்வொரு மாதமும் விவிலிய போட்டியை நடத்திவரும் என் அன்பு சகோதரன் அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ் அவர்களை மனதார வாழ்த்துகிறேன். இறைவாக்கு என்பது அள்ள அள்ள குறையாத அமுத சுரபி, எனவே தான் எண்ணற்ற விவிலிய நூல்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இக்கால சூழ்நிலைக்கு ஏற்ப இறைவார்த்தையை, நற்செய்தியை முழுமையாக அறிந்து கொள்ளவும் மக்கள் மனதை கவரச்செய்வதும் இறைபணியும் நற்செய்திப்பணியும்.

இந்த நற்செய்திப்பணியில் என் நண்பன் 20 வருடங்களாக விவிலிய போட்டியை சிறப்பாக நடத்திவருவது பாராட்டுக்குரியது. சகோ.ஜேம்ஸ் இறைவார்த்தையில் தாகம் கொண்டவர் ஆன்மிகத்தில் அதிக அக்கறை கொண்டவர், ஏழை எளியவர்களுக்கு உதவும் மனித நேயம் கொண்டவர், ஜெபிக்கும் அருட்சகோதரர் மற்றவர்களின் துன்பத்தில் பங்கெடுப்பவர். நீதிக்கும், நேர்மைக்கும் துணைநிற்பவர் விவிலியப் போட்டிகள் வழியாக எத்துனையோ மக்கள் விவிலியத்தை புரட்டிப்பார்க்கவும் அதனுடைய நறுமணத்தை நுகரவும் இயேசுவை கண்டு கொள்ளவும் இவருடைய போட்டிகள் வழிவகை செய்கிறது. எண்ணற்ற இறைமக்கள், துறவிகள் இப்போட்டிகளில் பங்கேற்று வருகின்ற உங்கள் அனைவரையும் நெஞ்சாரப் பாராட்டி மகிழ்கிறேன். ஒவ்வொரு மாதமும் சர்வவியாபி இதழில் விவிலிய போட்டியை வெளியிட அனுமதி வழங்கிவரும் புதுவை கடலூர் மறைமாவட்ட வார இதழான சர்வ வியாபி இதழின் மேலாளர் மேதகு ஆயர் பிரான்சிஸ் கலிஸ்ட் அவர்களையும், இதழின் ஆசிரியர் அருட்தந்தை ஆ.அருளானந்தம் அவர்களையும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். இயேசு கிறிஸ்து உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறைஆசீருடன்

**அருட்பணி M.இருதயசாமி**

கப்பூச்சின் சபை, பதோனி இல்லம் தில்லை நகர், திருச்சி - 18

### குறிப்பு:

1. பதில்களை 31.05.2023 க்குள் அனுப்பி வைக்கவும்.
2. பதிலை அதிகாரம் வசனத்துடன் சரியான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.
3. மதிப்பெணக் ள் அடிப்படையில் குலுகக் ல்முறையில் முதல் 10 நபர்களுகக்

பரிசுகள் ஜுன் மாதம்15ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும்.

4. ஒவ்வொரு மாதமும் பரிசு வழங்க விருப்பம் உள்ளவர்கள் முன் கூட்டியே எனது அலைபேசி எண்களுக்கு தெரியப்படுத்தவும்.

**இடமிருந்து வலம்**

1. ஒவ்வொரு பெண்ணுக்கும் ................. ஆண்.
2. இப்போது உங்களிடம் வர ................. மனமேயில்லை.
5. ........... யால்தான் ஒருவர் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆகமுடியும்.
9. இந்த ஆளைப் ................. நான் பெருமை பாராட்டுவேன்.
11. உங்கள் நகருக்கு முதன்முதல் வந்தவர்கள் .................
12. .............. உங்களிடம் ஆதாயம் தேடினாரா?
14. துன்பங்களை எங்கள் உடலில் .................... செல்கிறோம்.
16. என் மனம் அமைதியின்றித் ............
17. நாங்கள் ................ யான மகிழ்ச்சி அடைந்தோம்.
20. ................. எங்களை விடுவிப்பார்.

**வலமிருந்து இடம்**

1. உங்களிடம் வந்து ................ என நம்புகிறேன்.
2. திருத்தூதர் என ................ ப் பெறத் தகுதியற்றவன்.
4. நம்பிக்கையின் ........... இறைவனுக்கு ஏற்புடையவர் ஆக்கப்படுவோம்.
8. கடவுள் உடலை .................. உருவாக்கினார்.
11. ........... ஒரு நாழிகையேனும் அவர்களுக்கு அடிபணியவில்லை
12. .............. அப்பணியை முடிக்க வேண்டும்.
15. உங்கள் ............. சான்றுக்கும் வெளிப்படையாயிருக்கும்.
17. நிலையாக இருப்பது எத்துணை மாட்சி ............ தாயிருக்கும்.
19. அப்பேச்சை ............... ஆற்றலையும் அருளுகிறார்.
23. ஒரே ................ யையே பானமாகவும் பெற்றோம்.

**மே-ருந்து கீழ்**

2. என் அறிவுக்கு ................. வேலை இல்லை.
10. என்னை அறிவிலியாகவே ............... க் கொள்ளுங்கள்.
13. இக்கூடாரத்தை விட்டு விலக ............ என்பதல்ல.
15. அவர்களின் உள்ளம் ................. ப் போயிற்று.
18. இதைத் .................... கொள்ளுங்கள்.
22. ................ அவர்களைவிடச் சிறந்த பணியாளனே.

**கீழிருந்து மேல்**

1. பொருள் .................. மொழியே இல்லை.
2. உங்களுக்கு ........... நற்செய்தி மனிதரிடமிருந்து வந்ததல்ல.
3. ............... யில் காண்பதுபோல் மங்கலாய்க் காண்கிறோம்.
6. .................. எனப்படும் பிற இனத்தாரைச் சேர்ந்தவரல்ல.
7. கடவுள் .................... நீதியாகக் கருதினார்.
20. நேர்மையையும் தூய்மையையும் ................. விடுவீர்களோ என அஞ்சுகிறேன்.
21. நீங்கள் ..................... போக வேண்டாம்.

**Iகொரி II அதிகாரம் முதல் கலாத்தியர் வரை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | | | 12 | | | | | | 8 |
| | | | 15 | | | | 17 | | |
| | ■ | | | | 5 | | | | |
| | | | | 1 | | | | | 18 |
| 10 | | | | | | | | 4 | |
| | | 6 | 16 | | | | | 7 | |
| | | 9 | | | | 14 | | | |
| | 3 | | | 2 | | | | | |
| | 22 | | | | 11 | | | | |
| 20 | | | | | | | 19 | 23 | 21 |

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி**

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ் **M.A.,MA.,B.Ed HM**
தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப்போட்டி - 237
புனித மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638 656.
**Cell : 99423 11068, 95979 75430**

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்ச–

பிறப்பு 01-03-1957 | மறைவு 13-05-2022



**திரு. ழான்வியே அருள் மரியதாஸ் லூர்து**

பிறப்பு 05-03-1960 | மறைவு 31-05-2022



**திரு. ழான்வியே ரொசாரியோ ரத்தினதாஸ்**

"நீ என்னால் மறக்கப்படுவதில்லை" - எசா 44:21

**செபம்**

திவ்விய இயேசுவே, ஆத்மாக்களை இரட்சிக்கும் ஆண்டவரே! எங்கள் அனைவரின் அன்புக்கு பாத்திரமாக எங்கள் மத்தியில் வாழ்ந்து உம்மால் அன்புடன் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று உமது திருவடி நிழ–ல் வாழும் ***திரு.ழான்வியே அருள் மரியதாஸ் லூர்து – திரு. ழான்வியே ரொசாரியோ ரத்தினதாஸ்*** அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா பிரகாசத்தையும் அளித்தருளும் – ஆமென். 1கர்.மங்.திரி.

பிரிவால் துயருறும்
**ழான்வியே குடும்பத்தினர்**

**திருப்ப-:** 18-05-2023 காலை 6.00 மணி, மற்றும் மாலை 5.00 மணிக்கும் புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்ப- ஒப்புக்கொடுக்கப்படும்.

## இறைவனில் இணைந்த 13-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 20-11-1950



மறைவு: 16-05-2010

**திரு. L. லப்பாஸ் மரி பிலோமேன் பெலிசியன்**

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25**

16-05-2023 செவ்வாய் காலை 6.00 மணிக்கு புதுவை நெல்-த்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் நினைவு திருப்ப- நிறைவேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**

மனைவி: **A. *மரி ஜெயந்தி லப்பாஸ்***
நெல்லித்தோப்பு, புதுவை.

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்ச–



**திரு. ஞா. போனிபாஸ் ஜூ–யன்**
நிர்வாக அதிகாரி, ஜிப்மர் (ஓய்வு)

மண்ணில் மலர்ந்தது: 19-06-1938
விண்ணில் மலர்ந்தது: 12-05-2021

"மகனை கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறவேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்" – யோவான் 6:40

**ஜெபம்**

அவர்கள் இம்மண்ணில் உம்மீது கொண்டிருந்த நம்பிக்கையின் பொருட்டும், அந்நம்பிக்கையை அவர் பிறருக்கு அறிவித்ததன் பொருட்டும், அவர் இம்மண்ணில் நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியராக வாழ்ந்ததன் பொருட்டும் **போனிபாஸ் ஜூ-யன்** அவருக்கு நீர் நல்ல ஆத்மாக்களான பெற்றோரையும், உடன் பிறப்புகளையும், நல்ல குடும்ப வாழ்வையும், அன்பான பிள்ளைகளையும், மருமக்கள் பேரப்பிள்ளைகளையும் அளித்து உம் கண்ணின் மணிபோல் இவ்வுலகில் காத்து வந்தீர். அதுபோல் மறு உலகிலும் அவரை நம் அன்னை மரியின் மடியில் இருத்தி காக்க நிலைவாழ்வு பெற எங்கள் மன்றாட்டைச் சமர்ப்பிக்கின்றோம்.

இழப்பிலும் நம்பிக்கையுடன் மன்றாடும்

மனைவி: **திருமதி. பிளோமினா பெ-சிட்டா**
பிள்ளைகள் : **-யோனா, ஹெலேனா, சுசான்னா, கிறிஸ்டினா மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**திருப்ப-:**

12-05-2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 6.00 தட்டாஞ்சாவடி, புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

Mass at 18.30 on 12.05.2023 Church Centre Jean XXIII, France.
Mass at 6.00 PM at 11, impasse sainte Anne, 78200 Gassicourt, France.

# விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

இறைவா! எங்கள் குடும்பத்தில் தூண்களாய் திகழ்ந்து, அன்பின் வடிவாய் எங்களை பேணிக்காக்க பல தியாகங்களைச் செய்து எங்களை, வாழ்க்கை முன்னேற்றப் படிகளில் ஏற்றிவிட்டு உமது முடிவில்லா ஆட்சியில் சமாதானத்தில் இளைப்பாற உம்முடைய வான்வீட்டிற்கு உம்மால் அழைத்து கொள்ளப்பட்ட உமது அடியார்களுக்கு நித்திய இளைப்பாற்றி அருள வேண்டுகிறோம்.




இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-05-2023 திங்கள் மாலை 6.00 மணிக்கு, உப்பளம் **புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி** நிறைவேற்றப்படும். அனைவரும் இவர்களது ஆன்ம சாந்திக்காக செபிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்

பிரிவால் துயருறும்

**குடும்பத்தினர், உறவினர்கள்-** புதுச்சேரி.

---

## விண்ணக வாழ்வின்

## 46-ஆம் ஆண்டு நினைவு 2-ஆம் ஆண்டு நினைவு



திரு. A. **பீட்டர்**
(Co-operative Sub Registrar, Pollachi)

மண்ணில் 20-4-1934 விண்ணில் 23-05-1977



திருமதி.D.**மேரி ஜோஸ்பின் பீட்டர்** Retd.Tr.

மண்ணில் 30-4-1935 விண்ணில் 15-05-2021

*உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்பவர் - யோவா 11.25*

இறைவா! அன்பிற்கும், இரக்கத்திற்கும் உறைவிடமான ஆண்டவரே! ஆத்துமங்களை இரட்சிப்பவரே! உம்மால் அழைத்துக்கொள்ளப்பட்ட எங்கள் பெற்றோர் திரு. **பீட்டர்**-திருமதி **மேரி ஜோஸ்பின் பீட்டர்** அவர்களின் ஆத்துமங்களுக்கு இரக்கம் புரிந்து முடிவில்லா பிரகாசத்தை தந்தருள உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

-1கர்.மாங்.திரி.

**திருப்பலி:** 14-5-2023 காலை 7.30 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றப்படும். எங்களது பெற்றோரின் ஆன்ம இளைப்பாற்றிக் காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**பிள்ளைகள், மருமகன், மருமகள்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் சகோதரி**

புதுவை

# விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது" (மத்.5:1)

SERVIRE IN FIDE ET IN AMORE



பிறப்பு
18-07-1945

குருத்துவ திருப்பொழிவு
21-12-1971

ஆயர் திருப்பொழிவு
29-01-1997

பேராயர் - 05-07-2004

விண்ணகப் பிறப்பு
04-05-2021

## மேனாள் பேராயர் Dr. அந்தோணி ஆனந்தராயர் D.D., DCL

(புதுவை-கடலூர் உயர் மறைமாநிலம்)

அருள் வாழ்வைப் பெற்ற
எங்கள் அன்புப் பேராயரே

உம்மிடம் பழகுபவர்கள் மட்டுமல்ல
உம்மிடம் அழுபவர்களும் அறிவர்
உமது அகத்தின் அழகை.
அகத்தின் அழகு முகத்தில் தெரியுமன்றோ!

உம்மை அறிந்து வருவோர் மட்டுமல்ல
உம்மை நம்பி வருவோரும் அறிவர்
உமது அன்பின் அருமையை.
அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும் அன்றோ!

திரு அவைக்காய் உடல் உழைப்பை மட்டுமல்ல
திருப் பணிக்காய் பெரு மனதோடு உழைத்ததை
அன்றும் இன்றும் என்றுமே யாம் அறிவோம்.
உப்பிட்டவரை உள்ளளவும் நினைப்போம்
அன்றோ!

பேராயரே, நீர் இறைவனில் இன்பமாய்
இளைப்பாற
என் இதயம் இதமாக செபிக்கிறது.

நித்திய இளைப்பாற்றியை எம் பேராயருக்கு
அளித்தருளும் ஆண்டவரே!

முடிவில்லாத ஒளி அவர் மீது என்றும் ஒளிர்க!

**உம் நினைவில்**
**உம்மால் உருவாக்கம் பெற்ற இதயம்**

**Published and Printed by** Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. FRANCIS KALIST,
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.